# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 5/2011

வாதி தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. ஏ. அல்லிமுத்து, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | |
|---|---|---|
| பெயர் | எம்.கே.கருப்பசாமி வா.சா.2 | சாதி |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுகா | | வயது |

---

முதல் விசாரணை **18-03-2024.**

நான் தும்முசின்னம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிய அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சிய அழைப்பாணையில் கண்ட ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களை நான் கொண்டுவந்துள்ளேன். சாட்சி அழைப்பாணையில் கண்ட சர்வே எண். 90/3-க்குரிய 2005ம் ஆண்டுமுதல் தற்போது வரையுள்ள அடங்கல் பதிவேடடின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்.
அது **சா.சா.ஆ.1** ஆகும். சர்வே எண். 43/7க்குரிய 2005 முதல் தற்போதுவரையுள்ள அடங்கல்பதிவேட்டின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது அது **சா.சா.ஆ.2** ஆகும்.

<u>2, 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.</u>

நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் ஆவணங்களில் சர்வே எண். 90/3, 43/7 ஆகியவை மக்கள் மேம்பாட்டு கழகம், அதன் நிறுவனர் டேவிட் என்ற பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சர்வே எண்- 90/3-ல் 1 ஏக்கர் 12

சென்டும், சர்வே எண். 43/7-ல் 22 சென்டும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள இரண்டு ஆவணங்களிலும் தும்முசின்னம்பட்டி ராமலிங்க சன்யாசி தரும பரிபாலன மடம் அதன் டிரஸ்டி கருப்பசாமி என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.